புதுச்சேரி நீதிமன்றத்தில் ஆஜரானார் தமிழக நிதி அமைச்சர் மரிய வில்சன்

குற்றப் பத்திரிகை நகலைப் பெற்றார்

புதுச்சேரி, செப். 4: புதுச்சேரி நீதிமன்றத்தில் தமிழக நிதி அமைச்சர் மரிய வில்சன் வெள்ளிக்கிழமை ஆஜராகி, குற்றப் பத்திரிகை நகலைப் பெற்றுக் கொண்டார்.

புதுச்சேரி நீதிமன்றத்தில் வெள்ளிக்கிழமை ஆஜராகி விட்டு வெளியே வந்த தமிழக நிதி அமைச்சர் மரிய வில்சன்.

அமைச்சர் மரிய வில்சன் மீது, அவரது இளைய சகோதரர் மரிய குளோத்தின் வீடு புகுந்து கடந்த 8.8.2022-இல் தாக்கியது தொடர்பான வழக்கு புதுச்சேரி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இந்த வழக்கில், அவருக்கு குற்றப் பத்திரிகை நகல் வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டும் ஆஜராகாமல் இருந்தார். இந்த நிலையில், வழக்கை விசாரித்து வந்த புதுச்சேரி முதலாவது குற்றவியல் நடுவர் சேரலாதன் மாஹேவுக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில், இந்த வழக்கு பொறுப்பு நடுவர் சந்திரசேகர் முன்னிலையில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தபோது, அமைச்சர் மரிய வில்சன் நேரில் ஆஜராகி குற்றப் பத்திரிகை நகலைப் பெற்றுக் கொண்டார். இதைத் தொடர்ந்து வழக்கு விசாரணையை நடுவர் சந்திரசேகர், செப். 9-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

நீதிமன்றத்தில் இருந்து வெளியே வந்த அமைச்சர் மரியவில்சன் கூறும்போது, நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வருவதால், வழக்குத் தொடர்பாக எந்தவித கருத்தையும் தெரிவிக்க முடியாது என கூறிச் சென்றார்.

'மிரட்டல் வருகிறது': அமைச்சரின் சகோதரர் மரியகுளோத் கூறியதாவது: நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வந்த பிறகு எனக்கும், மனைவிக்கும் தொடர்ச்சியாக மிரட்டல்கள் வருகின்றன. உயிருக்கு பயந்து துபையில் தங்கி இருந்தோம். வழக்கு விசாரணை என்பதால் புதுச்சேரி வந்துள்ளோம். இப்போதும் விசாரணை முடிந்து வெளியூர் செல்கிறேன் என்றார்.

செப்.9-இல் தவெக ஆதரவுக் கட்சிகள் கூட்டம்

அமைச்சர்கள் நேரில் அழைப்பு

சென்னை தியாகராய நகரில் உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் மாநிலச் செயலர் பெ.சண்முகத்தை வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேசிய அமைச்சர்கள் என்.ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, சி.டி.ஆர். நிர்மல்குமார்.

சென்னை, செப். 4: வரும் செப்.9-ஆம் தேதி நடைபெறவுள்ள தவெக கூட்டணி மற்றும் ஆதரவுக் கட்சிகள் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்குமாறு இடதுசாரிகள் மற்றும் மதிமுக கட்சிகளின் தலைவர்களை அமைச்சர்கள் வெள்ளிக்கிழமை நேரில் சந்தித்து அழைப்பு விடுத்தனர்.

தவெக கூட்டணிக் கட்சிகள் மற்றும் ஆதரவுக் கட்சிகளின் முதல் கூட்டம் கடந்த ஜூலை 1-ஆம் தேதி நடைபெற்றது. இதைத் தொடர்ந்து, 2-ஆவது ஆலோசனைக் கூட்டம் தவெக தலைவரும், முதல்வருமான ச.ஜோசப் விஜய் தலைமையில் செப்.9-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்குமாறு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மதிமுக ஆகிய கட்சிகளின் தலைவர்களை தவெக அமைச்சர்கள் என்.ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, சி.டி.ஆர். நிர்மல்குமார் ஆகியோர் வெள்ளிக்கிழமை நேரில் சந்தித்து அழைப்பு விடுத்தனர்.

முன்னதாக, சென்னை தியாகராய நகரில் உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைமை அலுவலகத்தில் மாநிலச் செயலர் பெ.சண்முகத்தை அமைச்சர்கள் சந்தித்து அழைப்பு விடுத்தனர். அப்போது, தமிழகத்தின் அரசியல் நிலவரம், இந்திய அரசியல் நிலவரம், இடதுசாரி மாணவர்கள் குறித்து கணக்கெடுக்கக் கோரிய விவகாரம் உள்ளிட்டவை குறித்து ஆலோசனை நடத்தினர்.

'இண்டி' கூட்டணியை வலுப்படுத்த வேண்டும்: தொடர்ந்து, சென்னை தியாகராய நகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைமை அலுவலகமான பாலன் இல்லத்தில் அந்தக் கட்சியின் மாநிலச் செயலர் மு.வீரபாண்டியனை அமைச்சர்கள் சந்தித்து அழைப்பு விடுத்தனர்.

பின்னர், செய்தியாளர்களிடம் மு.வீரபாண்டியன் கூறியதாவது: மத்திய பாஜக அரசு நாடாளுமன்ற ஜனநாயகத்தைச் சிதைத்து வருகிறது. மதச்சார்பின்மையை சிதைப்பதுடன் சட்டத்தின் ஆட்சியை கேள்விக்குறியாக்குகிறது. இத்தகைய சூழலில் 'இண்டி' கூட்டணிக்கு கடமையும் பொறுப்பும் அதிகரித்துள்ளது. வரும் காலங்களில் தமிழக அரசியல் மற்றும் இந்திய அரசியலை வலுப்படுத்த 'இண்டி' கூட்டணியை வலுப்படுத்த வேண்டும்.

நாங்கள் தவெக கூட்டணியிலும், ஆட்சியிலும் பங்கேற்கவில்லை. இருப்பினும் செப்.9-ஆம் தேதி நடைபெறும் தவெக ஆதரவு கட்சிகள் கூட்டத்தில் பங்கேற்பது குறித்து கட்சியின் மாநிலக் குழுக் கூட்டத்தில் விவாதித்து முடிவு தெரிவிப்பதாக அமைச்சர்களிடம் தெரிவித்துள்ளோம் என்றார் அவர்.

'மதிமுக பங்கேற்கும்': மதிமுக பொதுச் செயலர் வைகோவை சென்னை அண்ணா நகரில் உள்ள அவரது இல்லத்தில் அமைச்சர்கள் சந்தித்து அழைப்பு விடுத்தனர்.

இதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் வைகோ கூறுகையில், தவெக ஆதரவு கட்சிகள் கூட்டத்தில் மதிமுக பங்கேற்கும் என்றார் அவர்.

'சுற்றறிக்கைக்கு வருத்தம்'

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் பெ.சண்முகத்துடனான சந்திப்புக்குப் பிறகு செய்தியாளர்களிடம் அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல் குமார் கூறியதாவது:

இடது சாரிகளுக்கு எதிரான சுற்றறிக்கை என்பது அரசின் கவனத்துக்கு வராமல் நிகழ்ந்த ஒன்று. இது அதிகாரிகள் தன்னிச்சையாக செய்த செயல். இது குறித்து ஏற்கெனவே அரசு சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டு, சுற்றறிக்கைகள் திரும்பப் பெறப்பட்டன. இதுகுறித்து நேரில் சந்தித்து வருத்தம் தெரிவித்தோம். இனிமேல் அதுபோன்ற செயல்கள் நிகழாமல் பார்த்துக்கொள்வதாக உறுதி அளிக்கப்பட்டது என்றார் அவர்.

விபத்தில் உயிரிழந்த 4 மாணவிகளின் குடும்பங்களுக்கு தலா ரூ.3 லட்சம்: முதல்வர் விஜய் உத்தரவு

சென்னை, செப். 4: நாமக்கல் அருகே சாலை விபத்தில் உயிரிழந்த 4 மாணவிகளின் குடும்பங்களுக்கு தலா ரூ.3 லட்சம் நிவாரண நிதி அளிக்க முதல்வர் ச.ஜோசப் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட உத்தரவு:

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், கொன்னையார் கிராமத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவி சுபிதா (19), இவரது சகோதரிகளும், பள்ளி மாணவிகளுமான நிவேதா (17), தனுஸ்ரீ (13), மற்றொரு பள்ளி மாணவி அபிநயா (12) ஆகியோரை அழைத்துக்கொண்டு இரு சக்கரவாகனத்தில் வீட்டுக்குச் சென்றபோது, தனியார் கல்லூரிப் பேருந்தில் மோதி விபத்து ஏற்பட்டது. இதில் நிவேதா, தனுஸ்ரீ, அபிநயா ஆகியோர் சம்பவ இடத்திலேயும், சுபிதா மருத்துவமனைக்கு செல்லும் வழியிலும் உயிரிழந்த துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்தேன்.

விபத்தில் உயிரிழந்த 4 மாணவிகளின் பெற்றோருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். உயிரிழந்த மாணவிகளின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன் எனத் தெரிவித்துள்ளார் அவர்.

மேக்கேதாட்டு அணைத் திட்டத்துக்கு எதிராக செப். 20 முதல் தமிழகம் முழுவதும் பிரசாரம்

பி.ஆர்.பாண்டியன்

நமது நிருபர்

புது தில்லி, செப். 4: கர்நாடக அரசின் மேக்கேதாட்டு அணை கட்டும் திட்டத்துக்கு எதிராக தமிழகம் முழுவதும் செப். 20-ஆம் தேதிமுதல் பிரசாரம் செய்யப் போவதாக தமிழக அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பி.ஆர். பாண்டியன் தெரிவித்தார்.

அணை விவகாரத்தை கர்நாடக முதல்வர் டி.கே. சிவகுமார், அரசியல் சுய லாபங்களுக்காக கையில் எடுத்து வருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

மத்திய மின்சாரம் மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் மனோகர் லாலை விவசாயிகள் சங்கங்களின் பிரதிநிதிகள் தில்லியை அடுத்த குருகிராமில் வியாழக்கிழமை மாலை 6.30 மணியளவில் சந்தித்தனர். சம்யுக்த கிஸான் மோர்ச்சா (அரசியல் சார்பற்ற) அமைப்பின் தலைவர் ஜக்ஜீத் சிங் தல்லேவால் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 13 விவசாயிகள் சங்கங்களின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இரவு சுமார் 11 மணிவரை இந்தப் பேச்சுவார்த்தை நீடித்தது. விவசாயிகள் நீண்ட காலமாக வலியுறுத்தி வரும் வேளாண் பொருள்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு சட்டபூர்வ உத்தரவாதம் அளித்தல் உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகள் குறித்து அமைச்சருடன் பிரதிநிதிகள் விவாதித்தனர்.

இந்தக் குழுவில் இடம்பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த பி.ஆர். பாண்டியன், கர்நாடகம், தமிழகம் இடையிலான காவிரி நீர் தொடர்புடைய மேக்கேதாட்டு அணை விவகாரம் குறித்து மத்திய அமைச்சரிடம் பேசியதாகத் தெரிவித்தார்.

இது குறித்து தில்லியில் உள்ள தமிழ்நாடு இல்ல வளாகத்தில் அவர் செய்தியாளர்களிடம் வெள்ளிக்கிழமை மேலும் கூறியதாவது: கர்நாடக அரசு மேக்கேதாட்டில் சட்டவிரோதமாக அணை கட்ட எடுக்கும் முயற்சியை மத்திய அரசு முற்றிலும் தடுத்து நிறுத்த வேண்டும், காவிரி நதி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் தொடர்புடைய தமிழ்நாடு, புதுச்சேரி அரசுகளின் ஒப்புதலின்றி கர்நாடகம் சமர்ப்பித்துள்ள வரைவுத் திட்ட அறிக்கைக்கு மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகம் எவ்வித அனுமதியும் வழங்கக் கூடாது என மத்திய அமைச்சரிடம் வலியுறுத்தினேன்.

மேக்கேதாட்டில் அணை கட்டுவது கர்நாடக விவசாயிகளையும் பாதிக்கும் என்பதால், தமிழக எல்லையான ராசிமணலில் அணை கட்டுவதே சரியான நடவடிக்கையாக இருக்கும் என தமிழகம் மற்றும் கர்நாடக விவசாயிகள் இணைந்து முடிவெடுத்து முன்பு முதல்வராக இருந்த சித்தராமையாவிடம் எடுத்துரைத்தனர்.

ஆனால், தற்போது கர்நாடக முதல்வராக உள்ள டி.கே. சிவகுமார் தனது சொந்த அரசியல் லாபத்துக்காக மேக்கேதாட்டில் அணை கட்டும் திட்டத்தை முன்னெடுக்கிறார். அந்த திட்டத்துக்கு எதிராக வரும் செப். 20-ஆம் தேதி தமிழகத்தின் பூம்புகாரில் இருந்து ஐந்து நாள்களுக்கு மாநிலம் முழுவதும் தொடர் பிரசாரப் பயணம் மேற்கொள்ள உள்ளோம்.

தேவைப்பட்டால் பிரதமரை நேரில் சந்தித்தும் மனு அளிப்போம்.

மத்திய அமைச்சரை சந்தித்தபோது, விவசாயிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தைக் கைவிட வேண்டும், எம்.எஸ். சுவாமிநாதன் குழுவின் பரிந்துரைப்படி பயிர்களுக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயிக்க சட்டபூர்வ உத்தரவாதம் அளிக்க வேண்டும், 'எல் நினோ' பாதிப்பு மற்றும் வறட்சியால் பாதிக்கப்பட்ட தமிழகத்துக்கு பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டது என்றார் பி.ஆர். பாண்டியன்.

மேட்டூர் அணை நீர்மட்டம் 92.19 அடி

மேட்டூர், செப். 4: மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 92.16 அடியிலிருந்து 92.19 அடியாக உயர்ந்துள்ளது.

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 7,790 கனஅடியிலிருந்து 8,456 கனஅடியாக சற்று அதிகரித்துள்ளது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்காக 7,000 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

அணையில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவைவிட அணைக்கு வரும் நீரின் அளவு அதிகமாக இருப்பதால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 92.16 அடியிலிருந்து 92.19 அடியாக உயர்ந்துள்ளது. நீர் இருப்பு 55.18 டிஎம்சியாக உள்ளது.

பொது அறிவிப்பு

எங்கள் கட்சிக்காரர் அல்லது அவரது நியமனதாரர் தமிழ்நாடு, திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் தாலுக்கா, கைவண்டூர் கிராமத்தில் அடங்கிய, கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள சர்வே எண்களில் அடங்கிய, மொத்தம் 1.44 ஏக்கர் அல்லது அதற்கு அண்மையான அளவுள்ள, திருவள்ளூர் சார்பதிவு மாவட்டம், திருவள்ளூர் பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ள நிலப் பகுதிகள் மீது, ("அட்டவணை சொத்து") ஈடுகாப்பு (Security) ஏற்படுத்துவதற்கு உத்தேசித்துள்ளார் என்பது இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

வ. எண்	சர்வே எண்	பரப்பளவு (ஏக்கரில்)	நில உரிமையாளர் பெயர்
1.	124/1D	0.36	M/s KSR ரியால்டி
2.	124/1G	0.63	
3.	124/1E	0.42	
4.	124/1F1B	0.015	
5.	124/1F2	0.015	
	மொத்தம்	1.44	

அட்டவணை சொத்து அல்லது அதன் ஏதேனும் பகுதி(களின்) மீது (அ) விற்பனை, பரிமாற்றம், குத்தகை, உரிமம், தீர்வு, விடுவிப்பு, அடமானம், வாரிசுரிமை, கொடை, உரிமைப்பூட்டு, பொறுப்பு, பராமரிப்பு, எளிதுரிமை, அறக்கட்டளை, உடைமை அல்லது வேறு எந்த வகையிலும் ஏதேனும் சட்டப்படி செல்லுபடியாகும் உரிமை, தலைப்பு அல்லது நலன் கொண்டிருக்கும் அல்லது உரிமை கோரும், அல்லது (ஆ) அட்டவணை சொத்து தொடர்பாக ஏதேனும் கோரிக்கை அல்லது தகராறு கொண்டிருக்கும் எந்தவொரு நபர் அல்லது நிறுவனமும், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 15 (பதினைந்து) நாட்களுக்குள் சட்டப்படி செல்லுபடியாகும் ஆவணச் சான்றுகளுடன் கீழே கையொப்பமிட்டவருக்கு எழுத்து மூலம் தெரிவிக்குமாறு இதன் மூலம் அழைக்கப்படுகிறார்கள். அதன் பிறகு பெறப்படும் எந்தவொரு கோரிக்கையும் அல்லது ஆட்சேபனையும் கடுமையாக கைவிடப்பட்டதாக / தள்ளுபடி செய்யப்பட்டதாகக் கருதப்படும் மற்றும் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளப்படாது.

ஓம்/-
ஷர்துல் அமர்சந்த் மங்கள்தாஸ் & கோ.
ஆர்த்தி லட்சுமிநாராயணன் (பங்குதாரர்), பரமகுரு C M (வழக்கறிஞர்),
வழக்கறிஞர்கள் & வழக்குரைஞர்கள்
எண்.87/48, 2வது தளம், ASV சேமியர்ஸ் சதுக்கம்,
சேமியர்ஸ் சாலை, R.A.புரம், சென்னை - 600028, தமிழ்நாடு.

IDBI BANK

ஐடிபிஐ வங்கி லிட்.
எண்.72, மே ஃபிளவர் 'E' கேலில், டாக்டர் பாலகந்தரம் ரோடு, அவினாசி ரோடு அடுத்து, ATT காலனி, கோயம்புத்தூர்-641 018.
இணையதளம் : www.idbi.bank.in, CIN:L65190MH2004GOI148838

அசையாச் சொத்தின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

ஐடிபிஐ வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய ரூ.2,26,86,033/- (31.08.2026 தேதி அன்று) தொகையை திருமதி. வெங்கடலட்சுமி சங்கரநாராயணன் மற்றும் திரு. பெருமாள் S வரதராஜ், என்பவர்களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட, ஆக்கபூர்வ கவாதீனம் (Constructive Possession) செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை, 09.10.2026 தேதியில் (காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை) விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு மற்றும் உள்ள இடத்தில் உள்ளவாறு' என்ற அடிப்படையில் விற்கப்படும். குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.4,15,10,000/- மற்றும் முன்வைப்புத் தொகை : ரூ.41,51,000/-.

அசையாச் சொத்து விபரம்

சேலம்-636 006, தாதகாபட்டி கிராமம், சர்வே எண்.95/5, வார்டு Y, பிளாக்-9, டவுன் சர்வே எண்.72, இதிலமைந்த 3,900 சதுரடி நிலம் மற்றும் அங்கு கட்டப்பட்ட 7,530 சதுரடி கட்டிடப் பரப்பிலான கதவு எண்.1/12 கட்டிடத்துடன் கூடிய குடியிருப்புச் சொத்து.

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு www.baanknet.com மற்றும் பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் www.idbi.bank.in இணையதளத்தில் 'லிங்க்'கில் பார்வையிடலாம்.

தேதி : 31.08.2026
இடம் : கோயம்புத்தூர்

ஓம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஐடிபிஐ வங்கி லிட்

வரி விளம்பரம்

PUBLIC NOTICE
CHANGE OF NAME

CHANGE OF NAME

I, **M.MAGESWARI**, Hindu, daughter of Thiru Marudhappan, born on 27th July 1995 (District of Birth : Chennai), residing at No.30, Vinobha Nagar, 7th Street, Tondiarpet, Chennai - 600081, has converted to Islam with the name of **RIHANA M** on 24th January 2023.
- M.MAGESWARI

CHANGE OF NAME

I, **NARMATHA MANOHARAN**, W/o. **R.Sathish Kumar**, (Date of Birth : 25.07.1983), residing at Flat No.1D, First Floor, Rony Residency, Srinivasa Nagar IInd Cross Road, Near Rajamangalam Police Station, Kolathur, Chennai - 600099, shall henceforth be known and called as **NARMATHA SATHISH KUMAR**
- NARMATHA MANOHARAN

53RD DEATH ANNIVERSARY

BORN : 7.9.1901
EXPIRED : 5.9.1973

In loving memory of
Thiru. **E.S. SARGUNAR** B.A.L.T
(Educational Officer)

You are always with us
And we with you
All that you were for us,
You still are,
We remember you with love,
Beloved Son Dr. E.R SARGUNAR
& Grandchildren

7,3rd Cross Street, Krishna Nagar, Pammal, Chennai - 75.

காயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

சுந்தரம் மியூச்சுவல்
— சுந்தரம் பைனான்ஸ் குரூப் —

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் ('ஃபண்ட்') திட்டங்களுக்கான திட்டத் தகவல் ஆவணம் / முக்கியத் தகவல் குறிப்பாணை / கூடுதல் தகவல் அறிக்கை ஆகியவற்றிற்கான அறிவிப்பு மற்றும் இணைப்பு

Kfin Technologies Limited-இன் வாடிக்கையாளர் சேவை மையங்கள் தொடர்பான பின்வரும் தகவல்களை முதலீட்டாளர்கள்/யூனிட் உரிமையாளர்கள் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்; இம்மையங்கள் இதில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைப்படுத்தும் தேதியிலிருந்து செயல்படத் தொடங்கும். சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களுக்கான முதலீட்டாளர்களின் பரிவர்த்தனைகளை ஏற்கும் அதிகாரப்பூர்வ மையங்களாக இந்த வாடிக்கையாளர் சேவை மையங்கள் செயல்படும்.

வாடிக்கையாளர் பராமரிப்பு மையத்தின் முகவரியில் மாற்றம்:

இடம்	தற்போதுள்ள முகவரி	புதிய முகவரி	நடைமுறைப்படுத்தும் தேதி
மும்பை - அந்தேரி	Kfin Technologies Limited, அலுவலகம் 103, வெர்டெக்ஸ் நால்கர், கமர்ஷியல் காம்ப்ளக்ஸ், எம்.வி. சாலை, அந்தேரி நீதிமன்றத்திற்கு எதிரில், அந்தேரி கிழக்கு, மும்பை - 400 069, மகாராஷ்டிரா ✆ தொலைபேசி: 022-4673 3669	Kfin Technologies Limited, அலுவலகம் எண் 204-B பிரிவு, 2nd தளம், சித்தி ஆரா, நித்யானந்த் நகர், 3 CHSL, சஹர் சாலை, அந்தேரி கிழக்கு, மும்பை - 400 069, மகாராஷ்டிரா ✆ தொலைபேசி: 022-4673 3669	09 செப்டம்பர் 2026

புதிய வாடிக்கையாளர் பராமரிப்பு மையம் திறப்பு:

இடம்	முகவரி	நடைமுறைப்படுத்தும் தேதி
ஹிம்மத்நகர்	Kfin Technologies Limited 1st தளம், மேப்பின் கிரிஸ்டல், சகாரி ஜின் இண்டஸ்ட்ரியல் ஏரியா, ஹிம்மத்நகர் - 383 001, குஜராத். இமெயில்: mfshimmatnagar@kfintech.com ✆ தொலைபேசி: +91 0277 2351856	07 செப்டம்பர் 2026

திட்டத் தகவல் ஆவணம்(கள்) / முக்கியத் தகவல் குறிப்பாணை(கள்) / கூடுதல்த் தகவல் அறிக்கை ஆகியவற்றின் மற்ற அனைத்து விதிமுறைகளும் நிபந்தனைகளும் மாறாமல் இருக்கும்.

இந்த இணைப்பு அவ்வப்போது திருத்தப்படும்படி சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் திட்டங்களின் திட்டத் தகவல் ஆவணம் (SID) / முக்கிய தகவல் குறிப்பாணை (KIM) / கூடுதல் தகவல் அறிக்கை (SAI) ஆகியவற்றின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட்டுக்காக,
ரா. அஜித் குமார்
நிறுவனத்தின் செயலாளர் & கம்ப்ளையன்ஸ் ஆபீசர்

இடம்: சென்னை
தேதி: செப்டம்பர் 05, 2026

மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்:
சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட்
(சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டு மேலாளர்)
CIN: U93090TN1996PLC034615

கார்ப்பரேட் அலுவலகம் 1வது & 2வது தளம், சுந்தரம் டவர்ஸ், 46, ஓல்டு சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 014.
தொடர்புக்கு: 1860 425 7237 (இந்தியா), +91 40 2345 2215 (வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு)
www.sundarammutual.com
பதிவு அலுவலகம்: எண். 21, மாடுலேஸ் சாலை, சென்னை - 600 002.

மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை, திட்டம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கவனமாக படிக்கவும்.